

## திரைக்குப் பின்னால்..

**கதை-வசனம்:** இளங்கோவன்,
**பாடல்கள்:** பாபாநாசம் சிவன்
**இயக்கம்:** எஸ்.எம்.ஸ்ரீராமுலு நாயுடு (ஆரம்பத்தில் ராஜாசாண்டோ, சில ஆயிரம் அடிகள் இயக்கம் செய்தார்.)
**தயாரிப்பு:** பட்சிராஜா பிலிம்ஸ்
**தணிக்கை சான்றிதழ்:** 2374,2,4,43.
**நீளம்:** 20,000 அடிகள்.

கோபப்படுறீயே, இதுதான் பொறுமையா? வேண்டுமானால் நீ என் தோளில் கை போடு. நான் ஏதாவது சொன்னா அப்புறம் கேளு'' என்பார்.

இவ்வாறு என்.எஸ்.கிருஷ்ணன் மதுரத்தைக் காதலில் விழ வைப்பார். இப்படிப் படம் முழுக்க நகைச்சுவைகளை வாரி வழங்குவார்கள் என்.எஸ்.கிருஷ்ணன், டி.மதுரம் ஜோடி.

**(தொடரும்)**
**படம் உதவி: ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்**

# சில சுவாரஸ்யங்கள்

- இந்தப் படத்தின் கதாநாயகன் தியாக ராஜபாகவதர் பாடிய பாடல்கள் தேன் கலவையாய் ரசிக்கப்பட்டன. 'வதனமே சந்திர பிம்பமோ', 'கவலையைத் தீர்ப்பது நாட்டிய கலையே', 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்தேன்', 'வள்ளலைப் பாடும் வாயால்' போன்ற பாடல்கள் அத்தனையும் மக்களின் வாய்களை முணுமுணுக்க வைத்தன. படத்தை இந்தப் பாட்டுகளுக்காகவே திரும்பத் திரும்பப் பார்த்தார்கள்.

- டி.ஆர்.ராஜகுமாரியின் கவர்ச்சி மிக்க நடனமும், நடிப்பும் இளங்கோவன் வசனமும், பாபநாசம் சிவனின் பாடல்களும் படத்துக்குப் பெருமை சேர்த்தன.

- இந்தப் படத்தில் என்.எஸ்.கிருஷ்ணனும், டி.ஏ. மதுரமும் கதையோடு இணைந்த நகைச்சுவை விருந்து மறக்க முடியாததாகும்.

- 'சிவகவி' படம் பாகவதர் நடித்த எட்டாவது படம். இப்படம் பாகவதருக்கு வெற்றிப்படமாக மட்டுமல்ல, பெயரையும் புகழையும் ஒருங்கே பெற்றுத் தந்தது.

- சிவகவி, ஒவ்வொரு ஊரிலும் ஆறு மாதங்களுக்குக் குறையாமல் ஓடியது.

- நாகபட்டினம் வெளிப்பாளையத்தில் டெண்ட் கொட்டகைக்கு ஆறு மாதங்களுக்கு உரிமம் வழங்கியிருந்தார்கள். இந்த ஆறு மாதமும் ஒரே படம் 'சிவகவி' ஓடி முடிந்ததும், அந்தக் கொட்டகைக் காரர் பெயருக்கு முன்னால் 'சிவகவி' செட்டியார் என்று பட்டம் இட்டு நாகப்பட்டினம் முழுவதும் அழைத்தார்கள்.

- இந்தப் படத்தை முதலில் நட்சத்திர இயக்குநர் ராஜா சாண்டோ இயக்கினார். சில கருத்து வேறுபாடு காரணமாக அவர் விலகிக்கொள்ளவே, பிறகு ஸ்ரீராமுலு இயக்கி, படத்தை முடித்தார். படமும் வெற்றி வாகை சூடியது.